# மேதகு குடியரசு துணைத்தலைவரின் பெரு, கியூபா மற்றும் ஐக்கிய ராஜ்யங்கள் விஜயம்- 2013 அக்டோபர் 25 முதல் நவம்பர் 2ந்தேதி வரை

அக்டோபர் 24, 2013

மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு எம். அமீது அன்சாரி, அரசு முறைப் பயணமாக பெரு, கியூபா மற்றும் ஐக்கிய ராஜ்யங்களில் 2013 அக்டோபர் 25ந்தேதி முதல் நவம்பர் 2ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். குடியரசுத் துணைத் தலைவர் மட்டத்தில் பெரு மற்றும் கியூபா ஆகிய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து விஜயம் செய்வது இதுவே முதல்முறை. குடியரசுத்துணைத் தலைவருடன் மனித வள மேம்பாட்டுத்துணை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் 4 பேர், அரசு மூத்த அதிகாரிகள் மற்றும் செய்தியாளர்கள் உடன் செல்கிறார்கள்.

பெரு நாட்டில் குடியரசுத் துணைத் தலைவர் 2013 அக்டோபர் 26ந்தேதி முதல் 29ந்தேதி வரை சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அங்கு பெரு நாட்டின் முதலாவது குடியரசுத் துணைத் தலைவர் மேதகு திருமதி மரசோல் எஸ்பினோசா குரூஸ் அவர்களுடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார். அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் வெளிநாட்டு வாணிபம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்களை சந்திக்கிறார். அதிபர் மேதகு ஒல்லாண்ட்டா ஹூமாலாவை சந்திக்கிறார். குடியரசுத்துணைத் தலைவரின் இந்த பயணம், இந்தியா மற்றும் பெரு நாட்டிற்கு இடையே தூதரக உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி அமைகிறது குறிப்பிடத்தக்கது. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வைக் குறிக்கும் வகையில் லிமா நகரில் இந்திய கலாசார விழாவை திரு அமீது அன்சாரி தொடங்கிவைக்கிறார். இந்தியாவும் பெருவும் இதமான நேசமான உறவினை அனுபவித்து வருகின்றன. பரஸ்பரம் விஜயங்கள் அனைத்து நிலைகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் பொருளாதார நலன்கள் இதில் பின்னப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் பெரு நாட்டிற்கு இடையேயான இருதரப்பு வாணிபம், 2012ம் ஆண்டில் 1.68

பில்லியன் அமெரிக்க டாலர் அளவில் அமைந்த்து. இது சம்மாக சீர்படுத்தப்பட்டது.

கியூபா நாட்டில் குடியரசுத் துணைத்தலைவர் அமீது அன்சாரி, அந்நாட்டின் முதலாவது துணை அதிபரான மேதகு மிகுயல் டியாஸ் கேனல் பெர்முடேசுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார். மேலும் அந்நாட்டு அதிபர் மேதகு ரவுல் கேஸ்டிரோவை 2013 அக்டோபர் 30ந்தேதி சந்திக்கிறார். ஹவானா நகரில் இந்திய கலாசார விழாவை குடியரசுத் துணைத்தலைவர் தொடங்கி வைக்கிறார். கூட்டு சேரா அமைப்பின் நிறுவன உறுப்பினர்களாக இந்தியாவும் கியூபாவும் வரலாற்று ரீதியான மற்றும் இணக்கமான உறவினை அனுபவித்து வருகின்றன. பன்முக துறைகளில் இரு நாடுகளும் நெருக்கமான தொடர்பினை பராமரிக்கின்றன. எரிசக்தி, உயிரி தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டுத்துறைகளில் இருநாடுகளும் தீவிரமாக பங்கேற்று வருகின்றன. கியூபாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் ஓ.என்.ஜி.சி.யின் வெளிநாட்டு பிரிவான ஓ.வி.எல். தீவரமாக பங்கேற்று வருகிறது.

இந்த சுற்றுப்பயணத்தின் கடைசி கட்டமாக குடியரசுத் துணைத்தலைவர் ஐக்கிய ராஜ்யங்களுக்கு செல்கிறார். அங்கு இஸ்லாமிய ஆய்வுகளுக்கான ஆக்ஸ்போர்டு மையத்தில் 2013 நவம்பர் 1ந்தேதி “அடையாளமும் குடியுரிமையும்” என்ற பொருளில் உரை நிகழ்த்துகிறார்.

**புது தில்லி**
**24 அக்டோபர் 2013**